**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.862/2022**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனியாண்டி | தொழில் | : தனியார் கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : பெருமாள் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தாசரிபட்டி | வயது | : சுமார் 77 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

நான் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பணம் கொடுத்தேன் என்றால் ? 04.09.2019ம் தேதி பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் ? சுரேஷ் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் இருந்தார்கள். சுரேஷ், மணிகண்டன் ஆகியோர்கள் எனக்கு உறவினரா என்றால்? எனக்கு தெரிந்தவர்கள். சுரேஷ், மணிகண்டன் ஆகியோர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் ? ஆமாம். தாவா கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்றால் ? சுரேஷ் என்பவர் எழுதினார். தாவா கடனுறுதிசீட்டு என்ன கலர் பேனாவால் எழுதப்பட்டது என்றால் ? புளூ கலர் பேனாவால் எழுதப்பட்டது. நான் செந்தில்குமாருக்கு வங்கியின் மூலமாக பணம் கொடுத்தேனா என்றால் ? கையில் இருந்ததை வீட்டில் வைத்து கொடுத்தேன். பணம் எத்தனை ரூபாய் தாள்களாக கொடுத்தேன் என்றால் ? ரூ.500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். 500 ரூபாய் தாள்கள் எத்தனை தாள்கள் கொடுத்தேன் என்றால் ? 10 கட்டுகள் 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். இந்த

வழக்கில் செந்தில்குமார் இறந்த பின்பு இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் உடன் இருந்தார்களா என்றால் ? அவர்கள் இல்லை. அவரது அப்பா தான் வாங்கினார். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் என்ன வேலை செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் ? கிணற்று வேலை செய்வதாக சொல்லியுள்ளேன். தற்போது தனியார் கூலி என்று தவறாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் அரசாங்கத்திற்கு வரி எதாவது செலுத்தி வருகின்றேனா என்றால் ? இல்லை. எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ? ரூ.15,000 வருமானம் வரும். மாத வருமானத்தில் எனது குடும்ப செலவு போக மீதமுள்ள பணத்தை சேமித்து வைத்து பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன். நான் கொடுத்துள்ள பணம் இளவரின் நலனுக்காக கொடுக்கப்படாததால் அவர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் ? சரியல்ல. நான் செந்தில்குமார் என்பவருக்கு பணம் கொடுக்காத நிலையில் பணம் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.07 16:46:21 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.862/2022**
**வழக்கு சாட்சி P.W.3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணிகண்டன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நாட்ராயதேவர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி, தெற்கு தெருவில் வசிக்கும் நாட்ராயதேவர் அவர்கள் மகன் இந்து சுமார் 55 வயதுள்ள மணிகண்டன் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்திருக்கும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ? நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையெழுத்து மட்டும் போடத் தெரியும். எனக்கு வாதி முனியாண்டியை எவ்வாறு தெரியும் என்றால் ? அவர் கிணறு வெட்ட செல்லும் நபர். அந்த வகையில் எனக்கு தெரியும். நான் எந்த வழக்கிற்காக சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன். என்றால் ? முனியாண்டி என்பவர் செந்தில்குமார் என்பவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்திருந்தார் அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முனியாண்டி என்பவர் அனைவரும் வட்டிக்கு பணம் கொடுக்க கூடிய நபர் என்றால் ? இல்லை. செந்தில்குமார் என்பவருக்கு எத்தனை ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தார் என்றால் ? தொகை ரூ.5,00,000/- பணம் கொடுத்தார். அதற்கு ரூ.100க்கு ரூ.1 ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தார். கடனுறுதிசீட்டில் நான் எத்தனாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் ? நான் மட்டும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். கடைசியாக நான் கையொப்பம் செய்தேன். சாட்சி கையொப்பம் போட என்னை யார் வரச் சொன்னார்கள் என்றால் ? செந்தில்குமார் என்பவர் தான் என்னை வரச் சொன்னார். செந்தில்குமார் என்னை எங்கு வரச் சொன்னார் என்றால் ? முனியாண்டி வீட்டிற்கு வரச் சொன்னார். நான் அங்கு சென்றேன். என்ன விபரம் என்று சொல்லி அழைத்தாரா என்றால் ? ஆமாம். பணம் கடன் வாங்குவதாக சொல்லி தான் அழைத்தார். கடனுறுதிசீட்டு எழுதியபோது நான் உடன் இருந்தேனா என்றால் ? ஆமாம். கடனுறுதிசீட்டினை என்ன கலர் பேனாவில் எழுதப்பட்டது என்றால் ? நீலகலர் பேனாவால் எழுதப்பட்டது. தாவா கடனுறுதிசீட்டில் எத்தனை பேர் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் ? நானும், சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். செந்தில்குமாரும் தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்துள்ளார். செந்தில்குமார் தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் மட்டும் தான் செய்தாரா என்றால் ? கையொப்பம் செய்து, ரேகையும் வைத்தார். எந்த கை விரலில் ரேகை வைத்தார் என்றால் ? இடது கை பெருவிரல் ரேகை வைத்தார். செந்தில்குமார், முனியாண்டியிடம் எந்தவொரு பணமும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் முனியாண்டி என்பவர் எனக்கு தெரிந்தவர் என்பதாலும், முனியாண்டிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.04.07 16:46:28 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.862/2022**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ் | தொழில் | : கொத்தனார் |
| தகப்பனார் பெயர் | : நாகமாணிக்கம் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 38 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.04.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி, சல்லிக்குழி, கோபாலபுரம் தெற்கு தெருவில் வசிக்கும் நாகமாணிக்கம் அவர்கள் மகன் இந்து சுமார் 38 வயதுள்ள சுரேஷ் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்திருக்கும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை ஏற்றுக் கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ? தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி

முனியாண்டியை எனக்கு எப்படி தெரியும் என்றால் ? அவர் கிணறு வெட்டும் தொழில் செய்து வருகிறார். அந்த வகையில் பழக்கம். பிரதிவாதி செந்தில்குமார் எப்படி பழக்கம் என்றால் ? 1–ம் பிரதிவாதி ஆலோபிளாக் கடை வைத்திருந்தார் அந்த வகையில் பழக்கம். நான் எந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? பணம் முனியாண்டி என்பவர் செந்தில்குமாருக்கு கொடுத்துள்ளார். அதற்காக சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பணம் கொடுக்கப்பட்டது என்றால் 04.09.2019ம் தேதி கொடுக்கப்பட்டது. செந்தில்குமார் என்பவர் பணம் வாங்கியதற்கு ஆதரவுக்கு ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் ? புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். வெற்று கடனுறுதிசீட்டில் தான் கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் ? ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு அதன் மீது ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கடனுறுதிசீட்டில் கைரேகையும் வைத்தார். கடனுறுதிசீட்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால்? 04.09.2019ம் தேதி எழுதப்பட்டது. பணம் கொடுத்த போதே கடனுறுதிசீட்டு எழுதப்பட்டது என்றால் ? ஆமாம். தாவா கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்றால் ? நான் தான் எழுதினேன். தாவா கடனுறுதிசீட்டை எந்த பேனாவால் எழுதினேன் என்றால் ? நீலகலர் பேனாவால் எழுதினேன். வாதியிடம், பிரதிவாதி எந்தவொரு பணம் வாங்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. நான் கடனுறுதிசீட்டை எழுதியதாக சொல்லியுள்ள நிலையில் செந்தில்குமார் என்பவர் எந்த கைவிரல் ரேகையால் கடனுறுதிசீட்டில் ரேகை வைத்தார் என்று நான் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் ? சரிதான். கடனுறுதிசீட்டில் என்ன காரணத்திற்காக தொகை கொடுத்ததாக சரத்து கண்டு கடனுறுதிசீட்டு எழுதினேன் என்றால் ? விவசாய செலவிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் சரத்து கண்டு எழுதினேன். மேற்படி விபரத்தை என்னிடம் செந்தில்குமார் தான் சொன்னார். செந்தில்குமார் என்பவருக்கு பணம் வாங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றாலும்,

இவ்வழக்கின் வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் வாதிக்காக வேண்டி பரிந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.07 16:46:39 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்